**பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**

**தேயிலை ஆராய்ச்சி சபை**

# பணிப்பாளர் பதவி

தலவாக்கலை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் மேலுள்ள பதவிக்காக தேவையான தகைமைகளை பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணி விபரம்:**

நிறுவனத்தில் அனைத்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள், மற்றும் நிர்வாகம் மற்றும் நிதி விவகாரங்களுக்கு பொறுப்பாக இருப்பார் என்பதோடு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் ஊக்குவிப்பை வழங்குவார்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியல் துறையில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடன் நான்கு (04) ஆண்டுகள் சிறப்புப் பட்டம் ஒன்று மற்றும் தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம்.

**மற்றும்**

முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது இருபது (20) ஆண்டுகள் ஆராய்ச்சி அனுபவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ அனுபவம், அதில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் பன்னிரண்டு (12) ஆண்டுகள் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற பின்னரும் ஐந்து (05) ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலும் இருத்தல் வேண்டும்.

**மற்றும்**

ஆராய்ச்சி விஞ்ஞானிகள்/ விரிவாக்க வல்லுநர்களின் பல துறை குழுக்களை வழிநடத்தவும் இயக்கவும் நிரூபிக்கப்பட்ட திறன். மனித மற்றும் ஏனைய வளங்களின் முறையான பணியமர்த்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம் மேலதிக தகைமையாக அமையும்.

**உள்ளக:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியல் துறையில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடன் நான்கு (04) ஆண்டுகள் சிறப்புப் பட்டம் ஒன்று மற்றும் தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் மேலதிக பணிப்பாளராக மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவை அல்லது பிரதி பணிப்பாளர் ஆராய்ச்சி/ விரிவாக்கத்தில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை அல்லது TRI இன் பிரிவுத் தலைவர்/ முதன்மை ஆராய்ச்சி அதிகாரி/ முதன்மை ஆலோசனை அதிகாரி ஒருவராக எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**அல்லது**

இரண்டு (02) ஆண்டுகள் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி பட்டம் ஒன்றுடன் விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் காலநிதிப் பட்டம் மற்றும் மேலதிக பணிப்பாளராக மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவை அல்லது பிரதி பணிப்பாளர் ஆராய்ச்சி/ விரிவாக்கத்தில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை அல்லது TRI இன் பிரிவுத் தலைவர்/ முதன்மை ஆராய்ச்சி அதிகாரி/ முதன்மை ஆலோசனை அதிகாரி ஒருவராக எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**மற்றும்**

ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் பல்துறை குழுக்களுக்கு தலைமை வகித்தல் மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறன். மனித மற்றும் ஏனைய வளங்களின் முறையான பணியமர்த்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம் மேலதிக தகைமையாக அமையும்.

**சம்பள அளவு:**

HM 2-3 (2025) ரூபா 173,000 – 12 x 4,850 - Rs. 231,200 p. m (2027.01.01 தொடக்கம் ரூபா 173,000/- அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும். (2026.01.01 இல் வழங்கப்படும் சம்பளத் தொகை ரூபா 150,325/- மற்றும் செலுத்தப்படாத தொகை ரூபா 22,675/-)

**வயது:**

40 வயதுக்கு குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம்

**ஏனைய நன்மைகள்**

i. சேமலாப நிதி: தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சம்பளத்தின் 10% பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதோடு நிறுவனம் 15% பங்களிப்புச் செய்யும். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நிறுவனம் 3% பங்களிப்புச் செய்யும்.

இந்தப் பதவி ஸ்திரமானதாகும். பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கோவையுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி, குறித்த கல்வி, தொழில் தகைமைகளின் பிரதிகள், சேவை சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் தொடர்பில் கேட்டறிய முடியுமான உறவினர் அல்லாத இருவரினது பெயர் மற்றும் முகவரிகளுடன் 2026 மார்ச் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் கையொப்பம் இட்டிருக்கும் நபருக்கு பதிவுத் தபாலில் கிடைப்பதற்கு அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபைகளின் அதிகாரிகளின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். இந்தத் தேவைக்கு அமையாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

விபரங்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் இணையதளமான www.tri.lk விற்கு பிரவேசிக்கவும்.

**தலைவர்**
**தேயிலை ஆராய்ச்சி சபை**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**சென் கூம்ஸ், தலவாக்கலை**